

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.2.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையக் கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 6 நியாய விலைக் கடைகளை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்,கௌஷிக், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




குமரிமுனையில் இருந்து அய்யன் திருவள்ளுவர் சிலையை பார்ப்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் எளிதாக சென்றடையும் வகையில், படகு சவாரி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் மூன்று புதிய பயணிகள் படகுகள் வாங்கப்படும் என்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கோவா கப்பல் கட்டும் தளத்தில் (Synergy Shipyard, Goa) நடைபெற்று வரும் படகு கட்டுமானப் பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (3.2.2026) நேரில் களஆய்வு செய்து கட்டுமானப் பணிகளை விரைவில் நிறைவு செய்து தருமாறு அலுவலர்களை அறிவுறுத்தினார். இந்த களஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைச் செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன் மற்றும் நெடுஞ்சாலைதுறையின் சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் ஆகியோர் உடனிருந்தனர்.

## 7 சட்டமன்றத் தொகுதிகளில்

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ - இரண்டாம் நாள் பரப்புரை!

## மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டனர்!


















**சென்னை,பிப்.4-**

**தமிழ்நாடு தலைகுனியாது - இரண்டாம் நாள் பரப்புரை கழகத் தலைவர் அறிவித்தபடி திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கியும், ஒன்றிய பா.ஜ.க. மற்றும் அடிமை NDA கூட்டணி தமிழ்நாட்டுக்கு இழைத்து வரும் அநீதியையும் மக்கள் முன்பு எடுத்துரைக்கும் விதமாகவும் “தமிழ்நாடு தலைகுனியாது” பரப்புரையானது 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் கழகத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.**

இரண்டாம்நாளான 02.02.2026 அன்று 7 சட்டமன்றத் தொகுதிகளில் பிரச்சாரமானது மாபெரும் எழுச்சியோடு நடைபெற்றது.

பூந்தமல்லியில் இனிகோ இருதயராஜ் , ஆயிரம் விளக்கில் எம்.எம்.அப்துல்லா, செங்கல்பட்டில் திண்டுக்கல் ஐ. லியோனி, ஜோலார்பேட்டையில் சபாபதி மோகன், ஓமலூரில் கோவி. செழியன், நத்தம் தொகுதியில் பொன் முத்துராமலிங்கம், விளாத்திகுளத்தில் மனோஜ் பாண்டியன் உள்ளிட்ட கழக நட்சத்திரப் பரப்புரையாளர்கள கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இப்பரப்புரையின் போது ஒன்றிய பாஜக அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதை மக்கள் முன் வெட்ட வெளிச்சம் போட்டு காட்டினர் கழக பேச்சாளர்கள். வழக்கமாக பெயரளவுக்கு திருக்குறளையாவது மேற்கோள் காட்டுவார்கள் ஆனால் இம்முறை அதைக் கூட செய்ய ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மனமில்லை; அதேபோல நமக்கு ஒதுக்க வேண்டிய கல்வி நிதி ரூ.3458 கோடி, நூறு நாள் வேலை திட்ட நிதி சுமார் 2000 கோடி, குடிநீர்இணைப்பு ரூ.3112 கோடி உள்ளிட்ட எந்த நிதி ஒதுக்கீடு பற்றிய அறிவிப்பும் இல்லாதது, புதிய வளர்ச்சி திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு இல்லாதது என வழக்கம் போல இந்த முறையும் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒன்றிய பட்ஜெட்டில் அல்வா மட்டுமே கொடுத்துள்ள ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை விளக்கும் வகையில் பொதுமக்களுக்கு ‘இது மோடி கொடுத்த அல்வா’ என அச்சிடப்பட்ட துண்டறிக்கையில யில அல்வா விநியோகிக்கப்பட்டது. இவை மக்களிடையே பெருத்த வரவேற்பை பெற்றது.

அதோடு இப்பரப்புரையின் போது திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களும் அதனால் தமிழ்நாட்டு மக்களும் தமிழ்நாடும் அடைந்து வரும் வளர்ச்சி பற்றியும் மக்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.